27.08.2018

To,

The Manager
Listing Department
BOMBAY STOCK EXCHANGE LTD.,
Floor no: 25, P.J. Towers
Dalal Street
Mumbai 400 001.

Dear Sir,

**Sub:** Newspaper publication - reg

With reference to above subject, Filing herewith the notice published in newspaper for 24th Annual General Meeting of the Company to be held on Monday, 17th September, 2018 at Green Meadows – Conference Hall No: 4/364-A, Anna Salai, Palavakkam, Chennai-600 041 at 10.00 A.M and

Kindly take the above information on record and oblige

Thanking You

for **S.I.CAPITAL & FINANCIAL SERVICES LIMITED**

D. Dhanalakshmi

D. DHANALAKSHMI
COMPANY SECRETARY
M No. 40935

## அதிமுக செயற்குழு கூட்டத்தில் பரபரப்பு

# துணை முதல்வர் பதவி ராஜினாமாவா?

## ஓ.பி.எஸ். பேட்டி: கட்சி பணியில் தீவிரம்

**சென்னை, ஆக.24:**

**சென்னையில் நடைபெற்ற அதிமுக செயற்குழு கூட்டத்தில் ஜெயலிலதாவுக்கு பாரத ரத்னா விருது வழங்கவேண்டும் என்பது உட்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.**

இதன் பிறகு பேட்டியளித்த துணை முதல்வர் ஓபிஎஸ் கட்சி பணிக்காக துணை முதலமைச்சர் பதவியை ராஜினாமா செய்ய தயாரா என்ற கேள்விக்கு பதிலளித்தார்.

அதிமுக செயற்குழு கூட்டம் நேற்று ராயப்பேட்டையில் உள்ள தலைமை அலுவலகத்தில் மாலை 4.45 மணி முதல் இரவு 8.00 மணி வரை நடைபெற்றது. அவைத்தலைவர் மதுசூதனன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் ஓபிஎஸ், இபிஎஸ் மற்றும் கே.பி.முனுசாமி உள்ளிட்ட 250 பேர் கலந்துகொண்டனர். கூட்டத்தில் தமிழக அரசு ஆற்றிய பல்வேறு பணிகளுக்கு பாராட்டு தெரிவித்தும், பெரியார், அண்ணா, ஜெயலலிதா ஆகியோருக்கு பாரத ரத்னா விருது வழங்க மத்திய அரசை வலியுறுத்தியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இந்த கூட்டத்தில் ஓபிஎஸ் பேசியபோது கட்சி பணிக்காக அமைச்சர் பதவியை ராஜினாமா செய்ய தாம் தயாராக இருப்பதாகவும் பிற அமைச்சர்களும் இதைபின்பற்ற வேண்டும் என்ற பரபரப்பான தகவல்கள் வெளியாகின. கூட்டம் முடிந்ததும் இது குறித்து பேட்டியளித்த ஓபிஎஸ்சிடம் கேட்டபோது யூகங்களுக்கு தம்மால் பதிலளிக்கமுடியாது என்று கூறினார்.

ஓபிஎஸ் அளித்த பேட்டியில் மேலும் கூறியதாவது:

**கேள்வி:-** நாடாளுமன்ற தேர்தலையொட்டி மூத்த நிர்வாகிகள் தங்கள் பதவிகளை துறந்து தீவிரமாக பணியாற்ற வேண்டும் என்று நீங்கள் கோரிக்கை விடுத்ததாக கூறப்படுகிறதே?

**பதில்:-** யூகமான கேள்விகளுக்கு என்னிடம் இருந்து பதில் வராது.

**கேள்வி:-** அ.தி.மு.க.வில் வழிகாட்டு குழு அமைக்கப்படும் என்று கூறி ஒரு வருடம் ஆகியும் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லையே?

**பதில்:-** வழிகாட்டு குழு அமைப்பதற்கான கால நிர்ணயம் இப்போது வரை செய்யப்படவில்லை. நேரம் வரும்போது அது தானாக அமையும்.

**கேள்வி:-** அ.தி.மு.க.வின் நாடாளுமன்ற தேர்தல் வியூகம் என்னவாக இருக்கும்?

**பதில்:-**ஜெயலலிதாவின் நல்லாட்சி தான் தற்போதும் தொடருகிறது. அவரது திட்டங்கள் மக்களுக்காக தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. மக்கள் பிரச்சினைகள் உடனுக்குடன் தீர்க்கப்பட்டு வருகிறது. தமிழகத்தில் நல்லாட்சி நடைபெற்று வருவதால், நடைபெற உள்ள நாடாளுமன்ற தேர்தலில் தமிழகம் மற்றும் புதுச்சேரியில் உள்ள 40 தொகுதிகளிலும் அ.தி.மு.க. மிகப்பெரிய வெற்றியை பெறும்.

**கேள்வி:-**அ.தி.மு.க. எத்தகைய கூட்டணியை அமைக்கும்?

**பதில்:-** எங்களோடு இணைந்து வருகிற தேசிய கட்சிகள் என்றாலும் சரி, மாநில கட்சிகள் என்றாலும் சரி, அவர்களுடன் இணைந்து தேர்தல் பணிகளை சந்திப்போம்.

**கேள்வி:-**பா.ஜ.க.வுடன் அ.தி.மு.க. கூட்டணி அமைக்க வாய்ப்பு உண்டா?

**பதில்:-**நாடாளுமன்ற தேர்தல் அறிவிக்கப்படும்போது முடிவுகள் அறிவிக்கப்படும். இவ்வாறு அவர் பதில் அளித்தார்.



அதிமுக செயற்குழு கூட்டம் கட்சி அவைத்தலைவர் மதுசூதனன் தலைமையில் நடைபெற்றது. இதில் முதல்வர் எடப்பாடி பழனிசாமி, துணைமுதல்வர் ஓ.பன்னீர்செல்வம், துணை ஒருங்கிணைப்பாளர் கே.பி.முனுசாமி, மக்களவை துணை சபாநாயகர் தம்பிதுரை, வைத்தியலிங்கம் எம்.பி. ஆகியோர் பங்கேற்றனர்.

## திருச்சி வடக்கு, தெற்கு மாவட்டம் சார்பில் தீர்மானம்

# ஸ்டாலினை திமுக தலைவராக தேர்ந்தெடுக்க வேண்டும்

## நேரு தலைமையில் கூட்டம்

**சென்னை, ஆக.24:**

**தொலைநோக்கு பார்வையுடன் செயல்படும் மு.க. ஸ்டாலினை தி.மு.க. தலைவராக ஒருமனதாக தேர்ந்தெடுக்க வேண்டும் என்று திருச்சி தெற்கு, வடக்கு மாவட்ட செயற்குழு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.**

திருச்சி தெற்கு மற்றும் வடக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் திருச்சி கலைஞர் அறிவாலயத்தில் நடைபெற்றது. கூட்டத்தை தொடங்கி வைத்து தெற்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் கே.என்.நேரு எம்.எல்.ஏ. பேசினார்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

இந்திய அரசியல் வரலாற்றில் முதுபெரும் தலைவரும், தமிழகத்தின் தன்னிகரில்லா தலைவரும், பொது வாழ்வில் 80 ஆண்டுகாலம் பணியாற்றியவரும், 5 முறை தமிழக முதல்-அமைச்சராகவும், தி.மு.க. தலைவராக 50 ஆண்டு காலம் பணியாற்றியவரும், கவிஞர், எழுத்தாளர் , அரசியல்



போன்ற பன்முக தன்மையுடன் விளங்கியவருமான கருணாநிதி மறைவுக்கு இக்கூட்டத்தில் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது என்றார்.

மேலும் திமுகவில் இளைஞரணி, துணை முதல்வர், செயல் தலைவர் என பல பொறுப்புகளில் சிறப்பாக பணியாற்றிய மு.க.ஸ்டாலினை ஒரு மனதாக திமுக தலைவராக தேர்ந்தெடுக்க வேண்டும் எனவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கூட்டத்தில் எம்.எல்.ஏ.க்கள் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, சவுந்தரபாண்டியன், ஸ்டாலின்குமார் மற்றும் முன்னாள் எம்.எல்.ஏ.க்கள், மாவட்ட நிர்வாகிகள், மாநகர நிர்வாகிகள், ஒன்றிய, பகுதி, கிளை செயலாளர்கள், நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



கீழ்ப்பாக்கம் போக்குவரத்து காவல்துறை சார்பில் ஈகா சிக்னல் அருகில் நடைபெற்ற ஹெல்மெட் விழிப்புணர்வு பிரச்சாரத்தில் வாகன ஓட்டிகளுக்கு துண்டு பிரசுரத்தை போக்குவரத்து போலீசார் வழங்கினர்.

## பெண் ஊழியர் கைது

விழுப்புரம், ஆக.24:

சின்னசேலம் தாலுகா வி.அலம்பளம் கிராமத்தை சேர்ந்தவர் ராதாகிருஷ்ணன் மனைவி சுமதி (வயது 42). இவருக்கு அதே கிராமத்தில் 30 சென்ட் நிலம் சொந்தமாக உள்ளது. இதற்குரிய சிட்டா அடங்கலை ஆன்- லைன் மூலம் பதிவேற்றம் செய்யும்படி கடந்த சில நாட்களுக்கு முன்பு சின்னசேலம் தாலுகா அலுவலகத்திற்கு சென்ற சுமதி அங்கிருந்த உதவியாளரான சேலம் மாவட்டம் ஆத்தூரை சேர்ந்த உமாமகேஸ்வரி (39) என்பவரை அணுகினார். பதிவேற்றம் செய்ய ரூ.5 ஆயிரம் உமா லஞ்சம் கேட்டுள்ளார். இதையடுத்து சுமதி லஞ்ச ஒழிப்பு போலீசாரிடம் புகார் செய்ததன் பேரில் தாலுகா அலுவலக பெண் ஊழியர் உமா கைது செய்யப்பட்டார்.

## மணல் கடத்தல்: 5 பேர் கைது

விழுப்புரம், ஆக.24:

விழுப்புரம் அருகே சேர்ந்தனூரில் இருந்து அரசமங்கலம் வழியாக மணல் கடத்தப்படுவதாக துணை போலீஸ் சூப்பிரண்டு சங்கருக்கு நேற்று தகவல் கிடைத்தது. இதையடுத்து அவரது உத்தரவின்பேரில் வளவனூர் போலீஸ் இன்ஸ்பெக்டர் லட்சுமி, சப்-இன்ஸ்பெக்டர் செந்தில்குமார், போலீஸ்காரர் சுகுமார் ஆகியோர் அரசமங்கலத்தில் தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டனர்..

அப்போது அந்த வழியாக வேகமாக வந்த ஒரு காரையும், அந்த காருக்கு பின்னால் வந்த லாரியையும் போலீசார் சந்தேகத்தின்பேரில் வழிமறித்தனர். ஆனால் அந்த காரும், லாரியும் அங்கு நிற்காமல் மின்னல் வேகத்தில் சென்றது. உடனே போலீசார் தங்கள் ஜீப்பில், அந்த காரையும், லாரியையும் பின்தொடர்ந்து துரத்திச்சென்றனர். சின்னக்கள்ளிப்பட்டு என்ற இடத்தில் காரையும், லாரியையும் போலீசார் வழிமறித்து மடக்கினர். பின்னர் அந்த லாரியை போலீசார் சோதனை செய்ததில் மேல்பகுதியில் செங்கற்களை வரிசையாக அடுக்கி வைத்திருந்ததும், அதன் கீழ் பகுதியில் 3 யூனிட் அளவிற்கு மணல் இருந்ததும் கண்டுபிடிக்கப்பட்டது. உடனே லாரியில் வந்த 3 பேர் மற்றும் காரில் வந்த 2 பேரையும் போலீசார் கைது செய்து விசாரணை நடத்தினர்.

# செல்வ விநாயகர் கோவில் மஹா கும்பாபிஷேகம்

## சிற்றம் சீனிவாசன் சொந்த செலவில் செய்தார்

**திருவள்ளூர் ஆக.24:**

**திருவள்ளூரை அடுத்த கடம்பத்தூர் ஒன்றியம் சிற்றம்பக்கம் கிராமத்தில் பழமை வாய்ந்த செல்வ விநாயகர் கோவிலில் மஹா கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது. இதில் ஏராளமான பக்தர்கள் பங்கேற்று விநாயகரை வணங்கி சென்றனர்.**

திருவள்ளூரை அடுத்த கடம்பத்தூர் ஒன்றியம் சிற்றம்பக்கம் கிராமத்தில் பழமை வாய்ந்த செல்வ விநாயகர் கோவில் அமைந்துள்ளது.

இந்த கோயிலில் கும்பாபிஷேகம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டது. அதற்காக திருவள்ளூர் மேற்கு மாவட்ட எம்.ஜி.ஆர் மன்ற துணை செயலாளர் சிற்றம் சீனிவாசன் தனது சொந்த செலவில் ரூ.15 லட்சத்தில் இந்த கோவில் புரனமைப்பு பணிகளை மேற்கொண்டார். பணிகள் அனைத்தும் முடிந்த நிலையில், இந்த கோவில் கும்பாபிஷேகம் நேற்று நடைபெற்றது.

முன்னதாக நேற்று முன்தினம் காலை கணபதி ஹோமம், யாக சாலை பூஜைகள் நடந்தது.



அதனைத்தொடர்ந்து காலை கோவில் கோபுர கலசம், அதை தொடர்ந்து மூலவர் செல்வ விநாயகருக்கு மகா கும்பாபிஷேகம் மற்றும் மகா அபிஷேகம், தீபாராதனை நடந்தது.

இதில் திரளான பொதுமக்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர். பிறகு பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

இதற்கான ஏற்பாடுகளை திருவள்ளூர் மேற்கு மாவட்ட எம்.ஜி.ஆர் மன்ற துணை செயலாளர் சிற்றம் சீனிவாசன் தனது சொந்த செலவில்செய்துள்ளார்.

## அணைகளின் உறுதி ஆய்வு செய்யப்படும்: பொதுப்பணித்துறை

திருச்சி, ஆக.24:

முக்கொம்பு கொள்ளிடம் மேலணையில் வெள்ளப்பெருக்கின் காரணமாக 9 மதகுகளில் உடைப்பு ஏற்பட்டது. அணையில் உடைப்பு ஏற்பட்டு இடிந்து விழுந்த பகுதிகளை தமிழக அரசின் பொதுப்பணித்துறை முதன்மை செயலாளர் எஸ்.கே. பிரபாகர் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

அப்போது அவர் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது:- கொள்ளிடம் அணையில் 9 மதகுகள் இடிந்து விழுந்ததற்கான காரணம் பற்றி பொதுப்பணித்துறை நீராதார துறை வல்லுனர்கள் கூர்ந்து ஆய்வு செய்து வருகிறார்கள். இந்த மதகுகள் இடிந்ததால் பொதுமக்களுக்கு எந்த வித பாதிப்பும் இல்லை. விவசாய பணிகளுக்கும் பாதிப்பு இல்லை. இரவு நேரத்தில் இடிந்து விழுந்ததால் உடனடியாக எதுவும் செய்ய முடியவில்லை.

முதல்கட்டமாக அணையின் இடிந்த பகுதிகள் தற்காலிகமாக சீரமைப்பு செய்யப்படும். இதற்கு நிரந்தர தீர்வு என்ன என்பது தொழில் நுட்ப வல்லுனர்களின் முழு ஆய்விற்கு பின்னர் தான் தெரியவரும்.

தமிழகம் முழுவதும் உள்ள இதுபோன்ற பழமையான அணைகளை ஆய்வு செய்து அதன் உறுதித்தன்மை பற்றி அரசுக்கு அறிக்கை அனுப்பப்படும். இந்த அறிக்கையின் அடிப்படையில் நீர் மேலாண்மை திட்டத்தை சிறப்பான முறையில் செயல்படுத்துவதற்கு முதலமைச்சர் உரிய நடவடிக்கை எடுப்பார். இவ்வாறு அவர் கூறினார்.

# மாற்றுத்திறனாளிகளுக்கு பைக் வழங்க நேர்காணல்

## பி.எம்.நரசிம்மன் எம்எல்ஏ பங்கேற்பு



**திருத்தணி, ஆக.24:**

**திருத்தணி சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் மாற்றுதிறனாளிகளுக்கு 3 சக்கர மோட்டார் பொருந்திய வண்டிகள் வழங்கிட நேர்காணல் நடைபெற்றது.**

சட்டமன்ற உறுப்பினர் பி.எம்.நரசிம்மன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் பாலாஜி வரவேற்று பேசினார்.

இதில் கலந்துக் கொண்ட மாற்றுதிறனாளிகள் மோட்டார் பொருத்திய 3 சக்கர வாகனங்கள் கேட்டு மனு செய்தனர். 80 சதவீதம் கால் ஊனமுற்றவரும், 2 கைகளும் திரிாத்திரமாக உள்ள 240 பேரும் இதில் தேர்வு செய்யப்பட்டனர். மற்றவரின் மனுக்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

தகுதியானவர்களுக்கு வாகனங்களை விரைந்து வழங்கிட வேண்டுமென அதிகாரிகளுக்கு எம்.எல்.ஏ. பி.எம்.நரசிம்மன் அறிவுறுத்தினார்.

நிகழ்ச்சியில் நகர செயலாளர் டி. சௌந்தர்ராஜன், ஆவின் முன்னாள் சேர்மென் வேலஞ்சேரி த. சந்திரன், முருகன் கோயில் தக்கார் வே.ஜெயசங்கர், பள்ளிப்பட்டு ஒன்றிய செயலாளர் டி.டி.சீனிவாசன், திருத்தணி வட்டார வளர்ச்சி அலுவலர் லஷ்மணன், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் டி.செல்வம், அரசு வழக்கறிஞர் டி.ராஜபாண்டியன், அம்மா பேரவை கே.வினாயகம் மற்றும் நிர்வாகிகள் எஸ்.ஜி.செல்வ குமார், ஜோதி நகர் அன்பு, காந்தி ரோடு சரவணன் உள்ளிட்டோர் கலந்துக் கொண்டனர்.


**பெயர் மாற்றம்**

திருவள்ளூர் - 602 108, புதுபட்டு, பன்னூர் அஞ்சல், கொம்மம்தாங்கல், பெருமாள் கோவில் தெரு, எண். 4/381 என்ற முகவரியில் குடியிருக்கும் திரு. ராமு என்பவரின் மகனாகிய **சுகுமார் ராமு (SUGUMAR RAMU)** என்கிற நான் (பிறந்த தேதி: 01.07.1974) இனிமேல் **சுகுமாரன் ராமு (SUGUMARAN RAMU)** என்று அறியப்படுவேன்.

**சுகுமார் ராமு**
**SUGUMAR RAMU**

**பெயர் மாற்றம்**

காஞ்சிபுரம்-602 105, கிலோய், திருவீதி அம்மன் கோவில் தெரு, எண். 2/175 என்ற முகவரியில் குடியிருக்கும் திரு. வேதாசலம் என்பவரின் மகனாகிய **ஸ்ரீதர் வேதாசலம் (SRIDHAR VEDHACHALAM)** என்கிற நான் (பிறந்த தேதி: 10.08.1978) இனிமேல் **ஸ்ரீதர் வேதாசலம் (SRITHAR VEDHACHALAM)** என்று அறியப்படுவேன்.

**ஸ்ரீதர் வேதாசலம்**
**SRIDHAR VEDHACHALAM**

**டைனாவிஷன் லிமிடெட்**

**CIN: L32301TN1973PLC006439**

பதிவு அலுவலகம்: 3-வது தளம், ஜாவர் பிளாசா,
எண். 1A, நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலை, சென்னை - 600 034, தமிழ்நாடு.
போன்: 044-2826 3651, 044-4204 0995
இ-மெயில்: investors@dynavision.in; இணையதளம்: http://www.dynavision.in

**43-வது வருடாந்திர பொதுப்பேரவைக்கூட்டம், மின்னணுவியல் வாக்குப்பதிவு பற்றிய தகவல் மற்றும் புத்தகம் மூடுதல் பற்றிய அறிவிப்பு**

வருடாந்திர பொதுப்பேரவைக்கூட்டம் தொடர்பாக அறிவிப்பில் குறிப்பிடப்பட்ட அலுவல்கள் பற்றி பரிசீலிப்பதற்காக கம்பெனியின் 43-வது வருடாந்திர பொதுப்பேரவைக்கூட்டம் 17.09.2018 திங்கட்கிழமையன்று காலை 11.15 மணியளவில் **பிரியோ பார்ட்டி ஹால், எண்.4 (பழைய எண்.23), 4-வது மெயின் ரோடு, காமராஜ் நகர், திருவான்மியூர், சென்னை-600 041** என்ற முகவரியில் நடைபெறும் என்பது இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

மேலும் 2013-ம் வருடத்திய கம்பெனிகள் சட்டத்தின் 91-வது பிரிவின் கீழும், 2015-ம் வருடத்திய கம்பெனிகள் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) விதிமுறைகளின் 10-வது விதிமுறையின் கீழும், **வருடாந்திர பொதுப்பேரவைக்கூட்டத்தை முன்னிட்டு** கம்பெனியின் பங்குதாரர்கள் பதிவேடும், பங்கு மாற்று புத்தகங்களும் **10.09.2018 திங்கட்கிழமை முதல் 17.09.2018 திங்கட்கிழமை வரை (இந்த இரு தினங்கள் உள்பட)** மூடப்பட்டிருக்கும்.

நேஷனல் செக்யூரிட்டீஸ் டெபாசிட்டரி லிமிடெட் (NSDL) நிறுவனத்துடன் இணைந்து மின்னணுவியல் வாக்குப்பதிவு மூலம் (மின்னணுவியல் வாக்குப்பதிவு) கம்பெனியின் பங்குதாரர்கள் அவர்களது வாக்குகளை பதிவு செய்வதற்கான வசதியை கம்பெனியானது அதன் பங்குதாரர்களுக்கு வழங்குவதில் மகிழ்ச்சியடைகிறது.

கட்-ஆப் தேதி **10.09.2018** அன்றுள்ளபடி கம்பெனியின் பங்குதாரர்கள் பதிவேட்டில் அல்லது டெபாசிட்டரிகளால் பராமரிக்கப்பட்டு வரும் பயனாளி உரிமையாளர்கள் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ள பெயரைக்கொண்ட பங்குதாரர் மட்டுமே மின்னணுவியல் வாக்குப்பதிவு மூலமாகவும், பொதுப்பேரவைக்கூட்டத்தில் வாக்குச்சீட்டு மூலமாகவும் வாக்களிக்க தகுதி பெற்றவர் ஆவார்.
பங்குதாரர்களுக்கு இதன் மூலம் தெரிவிக்கப்படுவது யாதெனில்:

- வருடாந்திர பொதுப்பேரவைக்கூட்டம் தொடர்பான அறிவிப்பில் குறிப்பிடப்பட்ட அனைத்து சாதாரண மற்றும் சிறப்பு அலுவல்கள் மீது மின்னணுவியல் வாக்குப்பதிவு மூலம் பரிவர்த்தனைகளை மேற்கொள்ளலாம்.
- 2017-18 நிதியாண்டுக்கான வருடாந்திர அறிக்கை மற்றும் 43-வது வருடாந்திர பொதுப் பேரவைக்கூட்டம் தொடர்பான அறிவிப்பை கம்பெனியின் அனைத்து பங்குதாரர்களுக்கும் இ-மெயில் மூலம் அனுப்பும் பணியை **23.08.2018** அன்றும், கூரியர் மூலம் அனுப்பும் பணியை **23.08.2018** அன்றும் கம்பெனியானது நிறைவுசெய்துவிட்டது.
- வருடாந்திர அறிக்கை மற்றும் 43-வது வருடாந்திர பொதுப்பேரவைக் கூட்டம் தொடர்பான அறிவிப்பின் நகல் ஆகியவற்றை கம்பெனியின் www.dynavision.in என்ற இணையதளத்தில் காணலாம்.
- வருடாந்திர பொதுப்பேரவைக்கூட்டம் தொடர்பான அறிவிப்பு அனுப்பப்பட்ட பிறகு கம்பெனியின் பங்குகளை பெற்று கம்பெனியின் பங்குதாரராக பொறுப்பேற்றுள்ள ஏதேனும் நபர் மற்றும் கட்-ஆப் தேதி அதாவது **10.09.2018** அன்றுள்ளபடி பங்குகளை வைத்திருக்கும் ஏதேனும் நபர் evoting@nsdl.co.in என்ற இ-மெயில் முகவரிக்கோ அல்லது RTA- csdstd@integratedindia.in என்ற இ-மெயில் முகவரிக்கோ எழுதி அனுப்பி ஐடி மற்றும் பாஸ்வேர்டை பெற்றுக்கொள்ளலாம்.
- **மின்னணுவியல் வாக்குப்பதிவு 14.09.2018 வெள்ளிக்கிழமையன்று (காலை 9.00 மணி) துவங்கி 16.09.2018 ஞாயிற்றுக்கிழமையன்று (மாலை 5.00 மணி) முடிவடைகிறது.**
- **16.09.2018** அன்று மாலை 5.00 மணிக்குப் பிறகு மின்னணுவியல் வாக்குப்பதிவு அனுமதிக்கப்பட மாட்டாது.
- வருடாந்திர பொதுப்பேரவைக்கூட்டம் நடைபெறும் இடத்தில் வருடாந்திர பொதுப்பேரவைக் கூட்டத்தில் கலந்துகொண்ட அனைத்து பங்குதாரர்களுக்கும் வாக்குச்சீட்டு படிவங்களை விநியோகித்து பிசிக்கல் வாக்குப்பதிவு முறையை வழங்குவதற்கும், மின்னணுவியல் வாக்குப்பதிவு மூலம் தங்களது வாக்குகளை பதிவு செய்யாத பங்குதாரர்களுக்கு கூட்டத்தின் போது வாக்குச்சீட்டு மூலம் வாக்களிப்பதற்கும் கம்பெனியானது ஏற்பாடு செய்துள்ளது.
- மின்னணுவியல் வாக்குப்பதிவு மூலம் தங்களது வாக்குகளை பதிவு செய்த பங்குதாரர்கள் பொதுப்பேரவைக் கூட்டத்தில் கலந்துகொள்ளலாம். ஆனால் பொதுப்பேரவைக்கூட்டத்தின் போது மீண்டும் வாக்களிக்க அனுமதிக்கப்பட மாட்டார்கள்.
- மின்னணுவியல் வாக்குப்பதிவு தொடர்பாக ஏதேனும் முறையீடுகள் / விசாரணைகள் இருப்பின், **கம்பெனி செயலாளர் திரு. P.R.கிருஷ்ணன்** அவர்களை பதிவு அலுவலகத்தில் பங்கு தாரர்கள் தொடர்புகொள்ளலாம் அல்லது **dvl@dynavision.in** என்ற இ-மெயில் முகவரிக்கோ அல்லது போன்:044-2826 3651/ 97890 62958 என்ற எண்களுக்கோ பங்குதாரர்கள் தொடர்புகொள்ளலாம்.
- ஒரு பங்குதாரர் இரு முறைகளிலும் தங்களது வாக்குகளை பதிவு செய்தால், மின்னணுவியல் வாக்குப்பதிவு மூலம் பதிவு செய்யப்பட்டது செல்லத்தக்கதாக கருதப்படும். வாக்குச்சீட்டு மூலம் பதிவு செய்யப்பட்டது செல்லாததாக கருதப்படும்.

இயக்குனர் குழுவின் ஆணைப்படி
**டைனாவிஷன் லிமிடெடுக்காக**
**R.P. அக்ரவால்**
**இயக்குனர்**

**தேதி: 24.08.2018**
**இடம்: சென்னை**

**PUBLIC NOTICE**

I, Mrs. M. Amaravathi, W/o. Late Muthuramalinga Devar, aged about 81 years, residing at No.28, Mount Poonamallee High Road, Nandambakkam, Chennai - 600 089. I am the absolute owner of the land properties measuring an extent of 35 Cents in Nanja S.No.58/1B, 18 Cents in Nanja S.No.58/2A, 8 Cents in Nanja S.No.232/1, 8 Cents in Nanja S.No.232/3, 15 Cents in Punja S.No.56/1, 21 Cents in Punja S.No.54/1A2, totalling 1 Acre 5 Cents in Sithalapakkam Village, Sholinganallur Taluk, Kancheepuram District. The said properties were originally belonged to Mr.Saravanan, Mr.Pakkiri and Mr.Balaraman sons of Mr.Gopal, were executed a registered Possessery Mortgage Deed, vide D.No.5894/84, dated on 17.09.1984, registered at the office of SRO Tambaram. They were not redeem the property as such I am the absolute owner of the property. Mr.Pakkirisamy, Mr.Balaraman and legalheirs of Mr.Saravanan paid amount and I have executed a registered receipt for 18 Cents in the above said property, vide D.No.8882/2017, dated on 16.08.2017, registered at the office of SRO Selaiyur. A week ago I have taken the above said document to meet my advocate, on the way to my advocate office near Vadapalani temple. I lost the said receipt vide D.No.8882/2017, dated on 16/08/2017, registered at the office of SRO Selaiyur. Those who find the same may kindly inform or return me the said document within in 7 days from this notice, if any person or persons misued the said document, Penal action will be taken against the said person or persons.

**Mrs.M.AMARAVATHI**

**SI CAPITAL & FINANCIAL SERVICES LTD.,**
**CIN : L67190TN1994PLC029151**
**Tel: 044 28415438 / 28415439**
**website: www:sicapital.co.in Email: info@sicaptal.co.in**
**Regd Office"64" Montieth court, Montieth Road, Egmore, Chennai 600 008**

**NOTICE OF ANNUAL GENERAL MEETING, E-VOTING & BOOK CLOSURE**

Shareholders are requested to refer to the NOTICE sent by registered post, dispatched on 24th August 2018 regarding the proceedings of the 24th Annual General Meeting to be held at 10.00 A.M. on Monday, 17th September 2018 at Green Meadows – Conference Hall No: 4/364-A, Anna Salai, Palavakkam, Chennai 600 041.
Pursuant to the provisions of Section 108 of the Companies Act, 2013, read with Rule 20 of the Companies (Management and Administration Rules, 2014, and Clause 44 of the SEBI (Listing Obligation and Disclosure Requirements) Regulations 2015, the Company is providing remote e-voting facilities to the shareholders whose name appear in the Register of Members as on the cut off date of 07th September 2018 to cast their votes for passing the resolutions as set forth in the Notice.
The e-voting platform is www.evoting.nsdl.com. The period commences on Friday, 14th September 2018 @9.00 am and shall end on Sunday, 16th September 2018 @ 5.00 pm. The e-voting shall not be available thereafter. The mode of casting e-votes is explained in the notice. Shareholders are requested to log into www. evoting.nsdl.com for FAQ and other details. They may also write to the company's email: info@sicapital.co.in.
Kindly note that once e-vote has been cast, you cannot vote on poll at the AGM. However, you can attend the meeting and participate in the discussions. Results of the e-voting will be announced by the scrutinizer and will be posted in the company's website www. sicapital.co.in and informed to the Stock Exchange.
Notice is further given, pursuant to section 91 of the Companies Act, 2013 that the Register of Members and Share Transfer books of the Company will remain closed from 14-09-2018 to 17-09-2018 (both days inclusive) for the purpose of 24th Annual General Meeting.

By Order of the Board of Directors
For **SI CAPITAL AND FINANCIAL SERVICES LIMITED**
Sd/-
Mary Rodrigues
Managing Director

24.08.2018
Chennai

**பிரிமியர் எனர்ஜி அண்டு இன்ஃப்ராஸ்ட்ரக்சர் லிமிடெட்**

**பதிவு அலுவலகம்: டாங்கி அபார்ட்மெண்ட்ஸ், 34, டாக்டர் பி.வி.செரியன் சாலை, எத்திராஜ் சாலை அருகில், எழும்பூர், சென்னை-600 008.**
**போன்: 044-2827 0041, இ-மெயில்: premierinfra@gmail.com**
**CIN: L45201TN1988PLC015521**

**30.06.2018 அன்றுடன் முடிந்த காலாண்டுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளின் சுருக்கம்**


| வ. எண். | விவரங்கள் | தனிப்பட்ட முடிவுகள் ரூபாய் லட்சங்களில் | | | |
| --- | --- | --- | --- | --- | --- |
| | | முடிந்த காலாண்டு 30.06.2018 | முடிந்த காலாண்டு 31.03.2018 | முடிந்த காலாண்டு 30.06.2017 | முடிந்த ஆண்டு 31.03.2018 |
| | | த. ஆகாதது | த. ஆனது | த. ஆகாதது | த. ஆனது |
| 1. | செயல்பாடுகளில் இருந்து வருவாய் | - | - | - | - |
| 2. | இதர வருவாய் | - | - | - | - |
| 3. | செலவுகள் | 137.00 | 44.32 | 52.98 | 214.58 |
| 4. | நிதிச் செலவுகள் | 52.39 | 51.88 | 47.65 | 201.84 |
| 5. | வரிச்செலவுகள் | - | - | - | - |
| 6. | சிறப்பு ரகங்கள் | - | (10957.99) | - | (10957.99) |
| 7. | இதர செயல்பாட்டு வருமானம் | - | 13.17 | - | 13.17 |
| 8. | வரிக்கு பிந்தைய சாதாரண செயல்பாடுகளில் இருந்து நிகர லாபம் / (நஷ்டம்) | (189.39) | (11041.02) | (100.63) | (11361.24) |
| 9. | செலுத்தப்பட்ட சம பங்கு மூலதனம் (சம பங்கு ஒன்றின் முகமதிப்பு ரூ.10) | 4135.01 | 4135.01 | 4135.01 | 4135.01 |
| 10. | பங்கு ஒன்றின் வருவாய் (சிறப்பு ரகங்களுக்கு பிந்தையது) (தலா ரூ. இல்லை) (வருடாந்திரப்படுத்தப்படாதது) | | | | |
| | அ) அடிப்படை | (0.46) | (0.20) | (0.24) | (0.98)) |
| | ஆ) திட்டம் குறைந்தது | (0.46) | (26.70) | (0.24) | (27.48) |

**குறிப்பு:**

1. மேற்குறிப்பிடப்பட்டவைகள் 2015-ம் வருடத்திய SEBI (பொறுப்புகளை பட்டியலிடுதல் மற்றும் தேவைகளை வெளிப்படுத்துதல்) விதிமுறைகளில் 33-வது விதிமுறையின் கீழ், பங்கு வர்த்தக நிறுவனத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள 30.06.2018 அன்றுடன் முடிந்த காலாண்டுக்கான நிதிநிலை முடிவுகளின் விரிவான படிவத்தின் சுருக்கமான அறிக்கையாகும். தனிப்பட்ட முடிவுகளின் முழு படிவத்தையும் கம்பெனியின் www.premierenergy.in என்ற இணையதளத்தில் காணலாம்.
2. 30.06.2018 அன்றுடன் முடிந்த காலாண்டுக்கான மேற்காணும் முடிவுகள் தணிக்கையாளர்கள் குழுவால் மறு ஆய்வு செய்யப்பட்டு பரிந்துரை செய்யப்பட்டு 13.08.2018 அன்று நடைபெற்ற இயக்குனர்கள் குழு கூட்டத்தில் ஒப்புதல் பெறப்பட்டது.

**பிரிமியர் எனர்ஜி அண்டு இன்ஃப்ராஸ்ட்ரக்சர் லிமிடெடுக்காக**
**M.நாராயணமூர்த்தி**
**நிர்வாக இயக்குனர்**
**DIN: 00332455**

இடம்: சென்னை
தேதி: 13.08.2018



Governor Banwarilal Purohit inaugurating Sri Lakshmi Kubera Homam at Sri Sankara Mutt, West Mambalam in Chennai, today.




Vijaya Medical & Educational Trust trustee and CEO, B Bharathi Reddy, lighting the traditional lamp to mark the inauguration of Vijaya Oncology Centre in Chennai on Thursday. V S Hospitals chairman Dr S Subramanian and Vijaya Medical & Educational Trust trustee B Vasundhara are present.

# TN not responsible for flooding in Kerala: CM

◆ *SC directs State govt to ensure water level at Mullaiperiyar is maintained at 139 ft*


|NT Bureau|

Chennai, Aug 24:

'The release of water from Mullaiperiyar dam was not the cause for floods in Kerala. Their government is raising false allegations to make us reduce the water level of Mullaiperiyar dam below 142 feet,' Chief Minister Edappadi K Palaniswami said today after Kerala filed a petition in the Supreme Court accusing its southern neighbour as the cause for the flooding in districts like Idukki near the Periyar river.

'There is no truth in Kerala government's petition,' the Chief Minister said, escalating the blame game after Kerala first accused Tamilnadu saying that flooding was triggered by the sudden release of water from the Mullaiperiyar dam.

Blaming Kerala government's inefficiency as the sole cause for flooding, Palaniswami said, 'The excess water released by the Kerala government from multiple dams at the same time is the reason for flooding.'





The Tamilnadu government also filed a reply petition today in the Supreme court supporting statements made by the Chief Minister.

However, a bench of Chief Justice Dipak Misra and Justices A M Khanwilkar and D Y Chandrachud considered the Centre's submission that the sub-committee of the Mullaiperiyar dam had met on 23 August and directed the Tamilnadu government to ensure that the water level is maintained at 139 feet, which is two feet below the permissible limit fixed by the apex court.

The written statement from the Tamilnadu counsel stated, 'Tamilnadu cannot accept blame for the flooding in Kerala. Only Kerala is responsible for the flood. From 14 to 19 August, 36.28 TMC water was released by the Kerala government from Idukki and Idamalayar dams. This was the major cause for flooding,'

To augment its case, the Tamilnadu petition carried a day-to-day data of the amount of water released from Mullaiperiyar and Idukki dams. It said, 'When the water level in the Mullaiperiyar dam reached 140 feet on 15 August,1.24 TMC water was released by us into the Idukki reservoir. But, the Kerala government released 13.79 TMC water from Idukki dam on the same date.'

'On 16 August, we released 2 TMC water from Mullaiperiyar. But Kerala released 4.47 TMC from Idukki,' it stated

Seeking more time along with Karnataka to file its reply, the Tamilnadu government told the Supreme Court that a 'sinister drama' was being played by the Kerala government to make the Supreme Court reassess its earlier order and reduce the water storage levels of Mullaiperiyar below 142 feet.

**Next hearing on 6 September**

The Supreme Court bench made it clear that it would confine itself to the aspect of disaster management and said that the decision to lower the water limit in the dam has been taken in view of the devastating deluge in Kerala. The bench fixed the matter for hearing on 6 September and asked Kerala, Puducherry, Tamilnadu and Karnataka to file their responses in the meantime.

# They get ready to sing, dance

◆ *Cancer survivors to organise live cultural show 26 Aug*

|BHAVANI PRABHAKAR|

Chennai, Aug 24:

In an attempt to create awareness that Cancer is curable, Freedom from Cancer Relief and Research Foundation is organising 'The Conquer 18,' a live orchestra music and dance show at The Music Academy, Alwarpet, on 26 August.

Speaking to *News Today*, foundation founder, CEO and managing trustee, Dr Anita Ramesh, said, 'The general notion that persists among people is that Cancer is incurable. To overcome it, more than 200 Cancer survivors are going to perform. It has been two years since they stopped their medications and are completely recovered.' 'The amount that is collected through the show will be used for treating other such patients,' she said.




There are quite a lot of policy level hitches when it comes to claiming insurance for the treatment. 'We also want to throw light on availability of insurance scheme. Star Health Insurance is the only company that provides assistance to Cancer patients for the treatment and covers a wide range of health conditions,' Anita said. Founded in 2011, the foundation has helped 558 Cancer patients to survive and hopes to continue saving lives.





As part of Varalakshmi Viratham, idols of Padmavathy Thayar and Srinivasa Perumal were decked up at Ashtalaksmi Temple, Besant Nagar in Chennai today. Devotees gathered in large numbers to seek blessings. Photos: A R Jayakumar

▲From page -1

## SPIRITED SHOW...

a heartbreak yesterday, missing out on the bronze in the men's double sculls. But all of them were able to turn it around in less than 24 hours. Dushyant Chauhan, bronze medallist in lightweight single sculls at Incheon, defended his third place in the event. Courtesy Bhagwan Singh and Rohit Kumar, India won another bronze in men's lightweight double sculls. Bhagwan is a son of a truck driver who had to quit journalism in the second year and join Indian Army due to financial issues. Dushyant, who is now an experienced rower, gave his all quite literally. The energy sapping dash in the final 500 metres led to him being carried on a stretcher to the medical centre. He was so drained out that he could not stand properly during the medal ceremony.

**Tennis**

Bopanna and Sharan defeated Aleksander Bublik and Denis Yevseyev of Kazakhstan 6-3 6-4 in 52 minutes. Less than 20 minutes into the match, the Indians were 4-1 ahead, breaking Bublik and Yevseyev at the very first opportunity they got. In no time, the top seeds were serving for the set with a 5-3 lead and Bopanna's booming serve wrapped it up in style for them. The Kazakhs had their moments but were undone by erratic play -- a brilliant cross-court backhand winner one moment and a powerless return buried in the nets the very next minute. In contrast, Bopanna and Sharan's easy camaraderie shone through in the match and they displayed near-perfect on-court coordination.

**Heena sizzles**

Heena Sidhu shot a near-perfect 10.8 with just three shooters left in the field but a 9.6 in the next attempt dashed her hopes of a better finish at the Jakabaring Shooting Range. Having made an incredible comeback after languishing at 13th and 17th places in the qualification stage, Heena did not look content with the eventual third-place finish as she managed to reduce the gap to a mere 0.1 between her and the gold medal. Heena shot 219.3 in the final. There was more disappointment in store for 16-year-old Manu Bhaker as the Commonwealth Games gold-medallist was eliminated at fifth place with a score of 176.2.

# Five youngsters held for assaulting cop

|NT Bureau|

Chennai, Aug 24:

Five youngsters were arrested by police this morning for assaulting a policeman on Thursday.

According to police, Stalin (40), head constable with the Intelligence Department lodged a complaint against one woman and four men who assaulted him outside Central Railway Station.

The police arrested Valarmathi (23) from Salem, Arunkumar (28), a resident of Anna Nagar West, Kalimuthu (27) and Shaju Kavitha (24) from Velappan Chavadi and Manikanadan (23) from Vadapalini.

The police said, the youngsters were playing Tharai Thappattai in public while collecting relief materials for Kerala flood victims outside Central Station last evening.

Stalin who arrived at the spot began taking a video of the activity which was questioned by the group. The verbal argument turned physical and Stalin was beaten up by the group. Subsequently, he informed the Railway Protection Force (RPF) present at the station.

The RPF informed the Periamet police who came and took the group to the police station, where Stalin lodged a complaint against them.

At 1 am, they were produced before a Magistrate who sentenced them to a day's imprisonment at Puzhal jail.

## Heavy rain to hit parts of north India

New Delhi, Aug 24:

The India Meteorological Department today forecast heavy to very heavy rain at isolated places over Uttarakhand, Bihar and Sub-Himalayan West Bengal and Sikkim.

According to a report released by the weather department, heavy rain at isolated places is also expected over Himachal Pradesh, Uttar Pradesh, East Rajasthan, West Madhya Pradesh, Gangetic West Bengal, Arunachal Pradesh, Assam and Meghalaya and Nagaland, Manipur, Mizoram and Tripura.

The eastern branch of monsoon trough at mean sea level has shifted northwards and passed through Firozpur, Kaithal, Meerut, Hardoi, Patna, Goalpara and thence eastwards to east Assam.

# One with nature

◆ *Sixty-year-old Shiva temple is built around banyan tree*



| AADITYA ANAND M |

Chennai, Aug 24:

First there was a banyan tree and then came a temple. But both are now existing in harmony. That is the speciality of the Sri Bala Vinayagar Sri Balamurugan Temple on Vanniyar Street, Kodambakkam.

Situated amidst a residential area with narrow streets, the temple was built under a huge banyan tree 60 years back, says N Shankar, the priest.

'We consider the banyan tree as sacred and very important as only because of the tree, the temple itself came into being. The tree might be some 70 years old. The locals placed a Vinayaka idol under it and started worshipping it. As more and more people came here to worship, they formed a group to raise funds and built a temple 60 years ago. It was also decided that the tree will not be disturbed. So, the sanctum sanctorums were built around it. Now, the tree is situated exactly at the centre of the temple,' he says.

The main deity here, however, is Dheerga Pureeswarar (Lord Shiva). On the left is a separate shrine for Sri Bala Vinayagar and on the right, for Sri Bala Murugan.

Between Bala Murugan and Dheerga Pureeswarar shrines, there is a small shrine for Bala Sastha (Ayyappa).

On the eastern side of the temple, there is a separate shrine for Sornambikai Devi. 'The other speciality of the temple is the way the Sornambikai deity has been sculpted. The left leg of the Ambal is in front of the other leg in a walking posture,' says priest Shankar.

Suryan and Chandran are placed at the entrance. And just near the entrance on the left, a Saibaba idol is enshrined. When asked about this, he says, 'There are a lot of Shirdi Saibaba devotees here and so they placed a Saibaba idol inside the temple during the latest consecration that happened two years ago. Apart from Saibaba, other shrines for Kaala Bairavar, Danvantri, Lakshmi Hayagreevar were constructed before the consecration.'

Behind the Shiva shrine, construction work on Lakshmi Narasimhar shrine is currently in progress. There are also other shrines for Veerabadrar, Naga Kanni and Bala Muneeswarar.

Every year Aadi Krithikai is celebrated in a grand manner. This year, on 5 August, during the occasion, special poojas and abhishekams were performed for Lord Muruga. After the special alankaram and aarati, 1,000 people were provided annadhanam,' says Shankar.

'Aadi Pooram every year sees Goddess Sornambigai decorated with bangles and a lot of people visit the temple on these occasions. Other than Aadi festival, other special occasions include Vinayaka Chathurthi, Navaratri and Shivarathri," he said.

Every year, on the occasion of Ayyappa Makara Jyothi, special poojas for Bala Sastha and Ganapathi homam are performed. The temple is open every day from 7.30 am to 11.30 am and 4.30 pm to 8.30 pm.

TEMPLE TALES

**NAME CHANGE**

I, **JOTHI SUBRAMANIAN** W/o. Thiyagasundaram, Date of Birth: 12/05/1977, residing at Plot No. 21, 19th Cross street, Padmavathi nagar Extension, Madambakkam, Chennai. -600126. shall hence forth be known as **JOTHILAKSHMI THIYAGASUNDARAM.**

**JOTHI SUBRAMANIAN**

**NAME CHANGE**

I, **THIAGASUNDARAM KANAGASABAI**, S/O. Kanagasabai, Date of Birth: 12/06/1970, residing at Plot No. 21, 19th cross street, Padmavathi Nagar extension, Madambakkam, Chennai-600126. shall hence forth be known as **THIYAGASUNDARAM KANAGASABAI.**

**THIAGASUNDARAM KANAGASABAI**

*Read* **NEWS TODAY** *Every Evening*

**BUTTERFLY GANDHIMATHI APPLIANCES LTD**

E-34, Sucons Oki Info Park, Rajiv Gandhi Salai, Navalur - 603 103, Kancheepuram District, Tamil Nadu

Notice is hereby given that the Company has received requests from the following shareholders for issue of duplicate Share Certificates in lieu of the original ones reported lost:

| Folio No. | Name of the Shareholder(s) | Share Cert. No. | Distinctive Nos. | No. of Shares |
|---|---|---|---|---|
| GMM00388 | MALLIKA B | 20390 | 3658078-3658177 | 100 |

Any objection to the issue of duplicate Share Certificates as stated Above should be intimated to the Company's Registered Office within 15 days from the date of release of this advertisement. The Company will proceed to issue such duplicates, if no objection received.

Date : 24.08.2018
Place : Chennai

K S RAMAKRISHNAN
COMPANY SECRETARY & GENERAL MANAGER - LEGAL

**SI CAPITAL & FINANCIAL SERVICES LTD.,**

CIN : L67190TN1994PLC029151
Tel: 044 28415438 / 28415439
website: www.sicapital.co.in Email: info@sicapital.co.in
Regd Office"64" Montieth court, Montieth Road, Egmore, Chennai 600 008

**NOTICE OF ANNUAL GENERAL MEETING, E-VOTING & BOOK CLOSURE**

Shareholders are requested to refer to the NOTICE sent by registered post, dispatched on 24th August 2018 regarding the proceedings of the 24th Annual General Meeting to be held at 10.00 A.M. on Monday, 17th September 2018 at Green Meadows – Conference Hall No: 4/364-A, Anna Salai, Palavakkam, Chennai 600 041.

Pursuant to the provisions of Section 108 of the Companies Act, 2013, read with Rule 20 of the Companies (Management and Administration Rules, 2014, and Clause 44 of the SEBI (Listing Obligation and Disclosure Requirements) Regulations 2015, the Company is providing remote e-voting facilities to the shareholders whose name appear in the Register of Members as on the cut off date of 07th September 2018 to cast their votes for passing the resolutions as set forth in the Notice.

The e-voting platform is www.evoting.nsdl.com. The period commences on Friday, 14th September 2018 @9.00 am and shall end on Sunday, 16th September 2018 @ 5.00 pm. The e-voting shall not be available thereafter. The mode of casting e-votes is explained in the notice. Shareholders are requested to log into www. evoting.nsdl.com for FAQ and other details. They may also write to the company's email: info@sicapital.co.in.

Kindly note that once e-vote has been cast, you cannot vote on poll at the AGM. However, you can attend the meeting and participate in the discussions. Results of the e-voting will be announced by the scrutinizer and will be posted in the company's website www. sicapital.co.in and informed to the Stock Exchange.

Notice is further given, pursuant to section 91 of the Companies Act, 2013 that the Register of Members and Share Transfer books of the Company will remain closed from 14-09-2018 to 17-09-2018 (both days inclusive) for the purpose of 24th Annual General Meeting.

By Order of the Board of Directors
For SI CAPITAL AND FINANCIAL SERVICES LIMITED
Sd/-
Mary Rodrigues
Managing Director

24.08.2018
Chennai